**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12 ம் நாள்
**இ.ம.எண். 205/2023**
**இல்**
**அசல் வழக்கு எண். 76/2023**

ஃபைரோஜ் பானு ..மனுதாரர்/வாதி

//எதிர்//

1) முருகேசன்
2) முகமது அனஸ் ..எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் வழக்கறிஞர் திரு.K.சங்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, பிரதிநிதிகளோ மனு சொத்தில் அத்துமீறி தனது அமைதியான வசத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்யவோ, மனு சொத்தில் அத்துமீறி நுழையவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஓர் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அவ்வாறே இம்மனு முடியும்வரை ஓர் எக்ஸ்பார்ட்டி இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். தான் எதிர்மனுதாரர்கள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், நஷ்ட ஈடு பரிகாரமும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனு சொத்து தனது தகப்பனார்/2ம் எதிர்மனுதாரர் அவர்களால் 2002 ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண பத்திரம் மூலம் கிரயம் பெறப்பட்டு பட்டா எண்.1662ல் அவர் பெயரில் பட்டாவுடன் அவரால் ஆண்டு அனுபவித்து வரப்பட்டது என்றும், தாவா சொத்தினை இவ்வழக்கு 2ம்

பிரதிவாதி அவரது மகளான தனக்கு 15.09.2022ல் ஓர் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் உரிமை மாற்றம் செய்து பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், தாவா சொத்துகள் பட்டா எண்.1999ல் தனது பெயரில் பதிவாகியுள்ளதாகவும், தற்போது எதிர்மனுதாரர்கள் வஞ்சகக் கூட்டாக சேர்ந்து கொண்டு தனக்கு சொந்தமான மனு சொத்தில் அத்துமீறி நுழைந்து மனு சொத்தினை ஆக்கிரமிக்கவும், அதில் கொட்டகை போடவும் எத்தனிப்பதாகவும் கூறியுள்ளார்.

3. மனு சொத்தில் தன்னால் அமைக்கப்பட்ட தகர ஷீட் கூரை வேய்ந்த காம்பவுண்ட் சிலாப் அடைப்பு உள்ள கட்டிடமும், முன்பக்கம் சுமார் 200 அடி நீளத்திற்கு கம்பி வேலியும் உள்ளது என்றும், தான் இள வயதுடைய பெண் என்பதாலும், கோஷா பெண்மணியாக உள்ளபடியாலும் சுமார் 5 கி.மீ தொலைவில் வசித்து வருவதாலும், இதனை சாதகமாக கொண்ட 1–ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திலிருந்த கம்பி வேலியினை அகற்றியுள்ளார் என்றும், வேலி கம்பியினையும், சொத்தில் தான் வைத்திருந்த பிவிசி பைப்புகளையும் மீன் குட்டையில் இருந்த மீன்களையும் திருடி சென்றதாகவும், தன்னை தரக்குறைவாக பேசி தனக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும், மனு சொத்தில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எந்தவிதத்திலும், பிரவேசிப்பதும் இல்லை என எழுத்துமூலம் அறிவிப்பு அனுப்பி 1ம் எதிர்மனுதாரரால் பெற்றுக்கொண்டும் அதற்கான பதிலறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், மேலும் 2ம் எதிர்மனுதாரர் மனு சொத்தினை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தபிறகு 1ம் பிரதிவாதியுடன் வஞ்சகக் கூட்டாக சேர்ந்து கொண்டு வீண் பிரச்சனைகள் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர்கள் அத்துமீறிய செயலை ஓர் உறுத்துக்கட்டளை உத்தரவு கொண்டு தடுத்து நிறுத்த வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், எனவே, அசல்வழக்கு முடியும் வரை ஓர் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறார். இல்லையேல் தனக்கு இம்மனுவில் Prima Facie Case and Balance of Convenienve உள்ளது என்றும், எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, பிரதிநிதிகளோ மனு சொத்தில் அத்துமீறி தனது அமைதியான வசத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்யவோ, மனு சொத்தில் அத்துமீறி நுழையவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஓர் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அவ்வாறே இம்மனு முடியும்வரை

ஓர் எக்ஸ்பார்ட்டி இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

4. இம்மனு சட்டப்படிக்கும் நியாயபடிக்கும் நிலை நிற்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. எதிர்மனுதாரரை அலைக்கழிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் வசிக்கும் கிராமத்திற்கு பக்கத்து கிராமத்தில் வசித்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரர் மீன்குட்டையை வைப்பதற்காக இடம் தேடிக்கொண்டிருந்ததை பார்த்த 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரரிடம் விற்பனை செய்ய இருப்பதாக கூறியதாகவும், அதனால், 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்குவதாக ஒப்புக்கொண்டு கிரயத்தொகை ரூ.1,10,000/– என நிர்ணயிக்கப்பட்டு 2021ம் ஆண்டு ஜுன் மாதத்தில் ரூ.1,00,000/–த்தை 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்ததாகவும், பாக்கி தொகையான ரூ.10,000/த்தை கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், அன்று முதல் 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கிரய ஆவணத்தை நிறைவேற்றி தரும்படி பலமுறை கேட்டும் அவர் அவரது வயதின் காரணமாக கிரய ஆவணம் எழுதிக்கொடுப்பதை தவிர்த்து வந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரை திருப்திப்படுத்துவதற்காக கிரய ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு பதிலாக கடந்த 26.09.2021 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் பக்கத்து கிராமத்தில் வசித்து வந்ததால் அவரது பேச்சை நம்பி 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் கொட்டகை அமைத்து மீன்குட்டை வைத்து அதில் மீன் வளர்த்து வந்ததாகவும், பலமுறை 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கிரய ஆவணம் செய்துதரும்படி கேட்டும், 2ம் எதிர்மனுதாரர் கிரய ஆவணம் எழுதிக்கொடுக்காததால் கிரய முன்தொகையாக கொடுத்த தொகையை திருப்பிக்கேட்டதாகவும், இந்த வழக்கின் அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பிறகுதான் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரை தாவா

சொத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதற்காக மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் கூட்டு சேர்ந்து மோசடியாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், தாவா சொத்தானது 2ம் எதிர்மனுதாரரால், கடந்த 2002ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்று அனுபவித்து வரப்பட்டது என்றும், கடந்த 15.09.2022ல் 2ம் எதிர்மனுதாரரின் மகளான மனுதாரருக்கு தானசெட்டில் மெண்ட் மூலம் கொடுக்கப்பட்டு மனுதாரர் தாவா சொத்தை அனுபவித்து வருவதாகவும், மனுதாரரின் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா உள்ளதாகவும், தாவா சொத்தில் மனுதாரரால் தகர ஷீட் கூரை வேய்ந்த காம்பவுண்ட் சிலாப் அடைத்துள்ள கட்டிடமும், முன்பக்கம் சுமார் 200 அடி நீளத்திற்கு கம்பி வேலியும் உள்ளதாகவும், மனுதாரர் தாவா சொத்திலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் வசித்து வருவதாகவும், எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திலுள்ள கம்பிவேலியை அகற்றியும், மனுதாரர் வைத்திருந்த பிவிசி பைப்புகளையும் தாவா இடத்தில் உள்ள மீன்குட்டையில் இருந்த மீன்களையும் திருடி எடுத்து சென்றுவிட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரருடன் 2ம் எதிர்மனுதாரர் வஞ்சக கூட்டு சேர்ந்துகொண்டு மனுதாரரிடம் பிரச்சனை செய்து வருவதாகவும், அதனால் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

6. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு எதிர்மனுதாரரை அலைகழிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் வசிக்கும் கிராமத்திற்கு பக்கத்து கிராமத்தில் வசித்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரர் மீன்குட்டையை வைப்பதற்காக இடம் தேடிக்கொண்டிருந்ததை பார்த்த 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரரிடம் விற்பனை செய்ய இருப்பதாக

கூறியதாகவும், அதனால், 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்குவதாக ஒப்புக்கொண்டு கிரயத்தொகை ரூ.1,10,000/- என நிர்ணயிக்கப்பட்டு 2021ம் ஆண்டு ஜுன் மாதத்தில் ரூ.1,00,000/-த்தை 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்ததாகவும், பாக்கி தொகையான ரூ.10,000/-த்தை கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், அன்று முதல் 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கிரய ஆவணத்தை நிறைவேற்றி தரும்படி பலமுறை கேட்டும் அவர் அவரது வயதின் காரணமாக கிரய ஆவணம் எழுதிக்கொடுப்பதை தவிர்த்து வந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரை திருப்திப்படுத்துவதற்காக கிரய ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு பதிலாக கடந்த 26.09.2021 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் பக்கத்து கிராமத்தில் வசித்து வந்ததால் அவரது பேச்சை நம்பி 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் கொட்டகை அமைத்து மீன்குட்டை வைத்து அதில் மீன் வளர்த்து வந்ததாகவும், பலமுறை 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் கிரய ஆவணம் செய்துதரும்படி கேட்டும், 2ம் எதிர்மனுதாரர் கிரய ஆவணம் எழுதிக்கொடுக்காததால் கிரய முன்தொகையாக கொடுத்த தொகையை திருப்பிக்கேட்டதாகவும், இந்த வழக்கின் அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பிறகுதான் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரை தாவா சொத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதற்காக மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் கூட்டு சேர்ந்து மோசடியாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

8. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

9. மனுதாரர் தரப்பில் தாவா சொத்தானது மனுதாரரின் தகப்பனாரான 2ம் எதிர்மனுதாரர் கடந்த 29.05.2022ம் தேதி கிரயம் பெறப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

அந்த கிரய ஆவணமானது ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கிரய ஆவணத்தின் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கடந்த 15.09.2022 அன்று தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி மனுதாரர் தாவா சொத்திற்கான பட்டாவை தனது பெயரில் மாற்றி அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. அந்த பட்டா ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

10. மனுதாரர் தாவா சொத்தினை 1ம் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து அதன் வேலியை பிரித்து எறிந்து அங்கிருந்த பிவிசி பைப்புகளையும் மீன் குட்டையில் இருந்த மீன்களையும் திருடிசென்றதாகவும், இதுகுறித்து எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை விற்பனை செய்ததாக கூறி 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து ரூ.1,00,000/– பெற்றுக்கொண்டதாகவும், 1ம் எதிர்மனுதாரர் கிரய ஆவணம் நிறைவேற்றித்தரக்கோரி 2ம் எதிர்மனுதாரரிடம் பலமுறை கேட்டபோது 2ம் எதிர்மனுதாரர் கடந்த 26.09.2021 அன்று கிரய உடன்படிக்கை ஆவணம் எழுதிக்கொடுத்ததாகவும், 3 மாதத்திற்குள் கிரய ஆவணம் செய்து தருவதாக கூறியதாகவும், அன்றைய தினமே தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரரிடம் ஒப்படைத்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் மனுவை பொறுத்தவரை முதல்தோற்ற வழக்கு யாருக்கு ஆதரவாக உள்ளது என்பதை மட்டுமே பார்க்கவேண்டும். இந்த மனுவை பொறுத்தவரையில் மனுதாரர் வசமே முதல்தோற்ற வழக்கு உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. எனவே, மனுதாரரின் ஈடு செய்ய முடியாத இழப்பினை கருத்தில்கொண்டும், சமநிலையினை கருத்தில்கொண்டும் எதிர்மனுதாரர்களோ,

அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, தாவா சொத்தை பொறுத்து எவ்வித தடையோ, இடையூறோ செய்யக்கூடாது என  இந்த வழக்கு முடியும் வரை ஓர் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு ஆதரவாக வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

**12. முடிவாக, மனு சொத்தில் எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, பிரதிநிதிகளோ அத்துமீறி மனுதாரரின் அமைதியான வசத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்யவோ, மனு சொத்தில் அத்துமீறி நுழையவோ கூடாது என இந்த அசல் வழக்கு முடியும் வரை மனுதாரர் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு ஆதரவாக அளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு  என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 26.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சிகள்: இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ1 | – | கடந்த 29.05.2002 அன்று 2ம் பிரதிவாதி பெற்ற கிரய சாசன பத்திரம் |
| ம.சா.ஆ2 | – | கடந்த 15.09.2022 அன்று 2ம் பிரதிவாதி வாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் |
| ம.சா.ஆ3 | – | கடந்த 20.12.2022 அன்று வாதி பெயரில் உள்ள பட்டா |
| ம.சா.ஆ4 | – | கடந்த 29.04.2023 அன்று வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் |
| ம.சா.ஆ5 | – | கடந்த 03.05.2023 அன்று 1ம் பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.